ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2136/22 - 2019 අගෝස්තු මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.08.15

*2136/22 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) என்னும் பிரிவின் கீழ் வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

வேலணை பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) என்னும் பிரிவின் கீழ், வேலணை பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட புலேந்திரன் கஜன் என்பவர் அங்கம் வகிக்கின்ற அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான வேலணை பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஆறுமுகம் கோபாலகிருஷ்ணன் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

1A - G 30736 — 27 (2019/08)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இப்போது, வேலணை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான இராஜேந்திரம் கிறிஸ்ரி அமல்ராஜ் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ஆறுமுகம் கோபாலகிருஷ்ணன் என்பவர் வேலணை பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

இ. கி. அமல்ராஜ்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
வேலணை பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
2019, ஓகத்து 15.

08-1016

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.